www.tamilarangam.net

T.E.I.B.

# செய்திக்கோவை!

நடுவம்
9
01-05-85 — 31-05-85

எனது தோழனே...!
இன்னுயிர்ச் சோதரனே...
எழுந்து வா!

நம் வியர்வையில் முளைத்த
புல்வெளிகளே
கரங்களாகட்டும்!
இனவெறி நாகங்களின்
கழுத்தை நெரிக்கட்டும்!
எனது தோழனே...
இருள் நிரந்தரமானதல்ல!
விடிவில் ஒருமுடிவு பிறக்கும்!

உனது
தயக்கம் தவிடுபொடியாகட்டும்!
மயக்கம்
விடைபெற்றுப் போகட்டும்!



## புரட்சி வெல்வோம்! உயர்ச்சி கொள்வோம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

01-5-1985

* நாவற்குழிப்பகுதியில் தமிழீழப்போராளிகளால் வைக்கப்பட்ட நிலக்கண்ணிவெடியில் சிங்கள இராணுவவாகனம் ஒன்று இலக்காகியுள்ளது.

* நாவற்குழிப்பகுதியில் 19 தமிழர்களும், அரியாலையில் 15 பேரும் வல்வெட்டித்துறையில் 8 பேரும் சிங்கள இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

* மேதினத்தையொட்டி தமிழீழத்தின் பல பகுதிகளிலும் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகதோழர்கள் பலத்த பாதுகாப்புடன் எழுச்சி ஊர்வலங்களை நடாத்தியுள்ளனர்

* அரியாலைப்பகுதியை மீண்டும் சுற்றிவளைத்த சிங்கள இராணுவத்தினரும் விமானப்படையினரும், புதிதாக திருமணம் செய்த K. நவரத்தினம் என்பவர் உட்பட 6 தமிழர்களை சுட்டுக் கொன்றுள்ளார்கள்.

03-5-1985

* அக்கரைப்பற்று பகுதியில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமட்டக்களப்புப் பிரதேச ஊர்காவற்படையினரின் ரோந்து நடவடிக்கையின் போது ஸ்ரீலங்க இராணுவத்துடன் ஏற்பட்ட திடீர் மோதலில், 27 சிங்கள அதிரடிப்படையாளரும், 10 சிங்களக்குண்டர்களும் பலியாகியுள்ளனர்.

* கடந்த வாரங்களில் தமிழ் - முஸ்லீம் இனக்கலவரமென, ஸ்ரீலங்கா அரசால் தூண்டிவிடப்பட்டு வந்த சதித்திட்டம் இதன் போது அம்பலமாகியுள்ளதுடன், தவிர்க்க முடியாதவகையில், கழக ஊர்காவற்படையின் பாதுகாப்பு நடவடிக்கையின் போது ஏற்பட்ட இத்தாக்குதல், வெற்றிகரமாக நடாத்தப்பட்டுள்ளது. இதன் போது கழகத் தோழர் ஒருவரும் வீரமரணம் அடைந்துள்ளார்.

* காரைநகர் கடற்படை முகாம் தமிழீழப் போராளிகளால் தாக்கப்பட்டுள்ளது.

* திருகோணமலை அருகில் உள்ள காட்டில் இருந்து 116 தமிழர்களின் சடலங்கள் சிதைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இக்கொலைகளுக்கு சிங்கள காடையர்களும் சிங்கள இராணுவமுமே பொறுப்பாக இருந்திருப்பார்களென நம்பப்படுகிறது.

05-5-1985

* காரைநகர் பகுதிகளில் சிங்கள கடற்படையாளர்களும் மேற்கொண்ட வெறியாட்டங்களின் போது 100ற்கு மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும், 1000ற்கு மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு ஆயிரக்கணக்கானோர் அகதிகளாக்கப்பட்டு பாடசாலைகளிலும், கோவில்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

* யாழ் பண்ணைப்பாலத்திற்கு அருகாமையில் சென்று கொண்டிருந்த பஸ்வண்டி ஒன்றை வழிமறித்து சிங்கள இராணுவத்தினர் சுட்டதில் பஸ்சாரதி மகேஸ்வரன் உட்பட சதாசிவம் 35 வ-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யது, சொக்கலிங்கம் 40 வயது, சத்-
யமூர்த்தி 38 வயது ஆகியோர் பலி-
யாகியுள்ளார்கள்.

08-5-1985

* நிக்கரவட்டியா தாக்குதலின் சம்பந்த-
ப்பட்டவர்கள் அல்லது தாக்குதல் சம்-
பந்தமான தகவல்கள் தருபவர்களுக்கு,
20 லட்சம் ரூபா சன்மானம் வழங்க-
ப்படும் என இலங்கை மக்கள்-
வங்கி அறிவித்துள்ளது.

09-5-85

* கொக்காவில் சிங்கள இராணுவமு-
காம் தமிழீழப்போராளிகளால் தாக்க-
ப்பட்டுள்ளது.

* வவுனியா - காங்கேசன்துறை சேவையில்
ஈடுபட்டிருந்த காங்கேசன் ரவலர்ஸ்
தனியார் பஸ்வண்டியை மறித்து ஏறிய
சிங்கள இராணுவத்தினர், பஸ்வண்டி
முறிகண்டியில் தரித்து நின்ற சமயம் பிள்-
ளையார் கோவிலுக்குள் முற்றுகையிட்டு
கோவிலில் பூசகர் உட்பட கற்பூரம்
ஏற்றிக் கொண்டிருந்த 22 பேர்சுட்-
டுக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

* வல்வெட்டித்துறைப்பகுதியில் சிங்கள
இராணுவவாகனம் ஒன்று தமிழீழப்
போராளிகளால் வைக்கப்பட்ட நிலக்-
கண்ணி வெடிக்கிலக்காகியதைத்-
தொடர்ந்து சிங்கள இராணுவமே-
ஜர் ஒருவர் உட்பட சிங்கள இரா-
ணுவத்தினர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

10-5-1985

* மன்னார் பொலிஸ்நிலையம் தமிழீழப்-
போராளிகளால் தாக்கப்பட்டதைத் தொ-
டர்ந்து பொலிஸ் நிலையக் கட்டிடமும்,
மன்னார்பாலமும் சேதப்படுத்தப்பட்டுள்ளது

* யாழ் பிரதான வீதியில் சிங்கள இராணு-
வம் நடாத்திய வெறியாட்டத்தைத் தொ
டர்ந்து K. புண்ணியமூர்த்தி 12 வயது, S. சுந்
தரராஜ் 23 வயது, சண்முகம் 45 வயது
ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்-
கள்.

* P.T.I செய்தி நிருபர் கிசாத் ஆனந்-
ஸ்ரீலங்கா அரசினால் கைது செய்ய-
ப்பட்டு, வெலிக்கடைச்சிறையில் அடை-
ந்து வைக்கப்பட்டு, பின்னர் இலங்-
கையில் உள்ள இந்திய தூதர-
கத்தின் மூலம், 4 இலட்சம் ரூபா பிணை-
யில் நிபந்தனையின்றி விடுதலை-
செய்யப்பட்டுள்ளார்.

* பருத்தித்துறை, திக்கம், பொலிகண்டி,
உடுப்பிட்டி, தொண்டமனாறு, ஊரணி,
நவிண்டில் ஆகிய பகுதிகளில் சிங்கள
கூலிப்படையினரின் வெறியாட்டத்-
தின்போது சிறுவர்கள் உட்பட 300க்-
கும் மேற்பட்ட அப்பாவித்தமிழர்கள்
சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

12-5-1985

* நாம் சிங்கள மக்களுக்கு எதிரா-
னவர்கள் அல்ல, அமெரிக்க ஏகாதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



* கிளிநவில் வைக்கப்பட்ட நிலக்கண்ணி வெடிக்கிலக்காகி சிங்கள பொலிஸ் கமாண்டோக்கள் பலியாகியுள்ளனர்.

* நவாலியில் சிங்கள இராணுவத்தினர் நடாத்திய தேடுதல் வேட்டையின் போது 6 இளைஞர்கள் சுடடுக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

* யாழ் நாயன்மார்க்கட்டைச் சேர்ந்த சுப்பிரமணியம் வீரா என்ற இளம் பெண் சிங்கள இராணுவத்தால் மானபங்கப்படுத்தப்பட்டபின் கொல்லப்பட்டுள்ளார்.

24-05-1985

* திருமலைக் கருகில் 15ற்கும் மேற்பட்ட தமிழர்கள் சிங்கள இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகவும் - இதில் திருமலை நகரவாசிகள் சங்கத்தலைவரின் மகனான சிவபாலன், கங்காதரனும் அடங்குவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

29-5-1985

* திருகோணமலை பன்குளத்தில் ஒரு - ஆறுமாதக் குழந்தை 6 பெண்கள் உட்பட 8 பேர் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

---

மலர்வு:- 25-04-1944.

**தமிழீழ விடுதலைக்குத் தன்னை அர்ப்பணித்த முதல் தமிழ்ப்பெண்**

# க.ஊர்மிளாதேவி.

உதிர்வு:- 19-05-1980.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் அளப்பரிய தியாகங்களையும், சேவைகளையும் புரிந்து இலைமறைகாயாக வாழ்ந்த இந்த இளம் வீராங்கனையின் வீரவரலாறு தமிழீழத்தில் இன்னும் பல வீராங்கனைகளை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறு தமிழீழப் பெண்குலத்துக்கே விழிப்பூட்டும் விடிவெள்ளியாக, விடுதலை இயக்கத்தின் தன்னிகரற்ற வீராங்கனையாக, விளங்கிய ஊர்மிளாவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* பத்தியத்திற்கு எதிரானவர்கள் என்ற தமிழீழ மக்கள் விடுதலைக் கழக செயலதிபர் தோழர் உமாமகேஸ்வரனின் அறிக்கையை ஒலிபரப்பிய ஸ்ரீலங்கா அரசு இவ்வறிக்கையை சிங்கள மக்கள் நம்ப வேண்டாம் எனவும் இவர்கள் மார்க்சிய லெனினிய சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டவர்கள் என்றும் ஒலிபரப்பியுள்ளது.

* யாழ் கொக்குவில் பகுதியில் 24 வயதுடைய சுப்பையா சுப்பிரமணியம், ஜோசப் மதிவராஜா-24, இராஜேந்திரன் சதாசிவம்-36, சத்தியசீலன்-28, ஆனந்தன்-38 ஆகியோர் சிங்கள இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்கள்.

* கொடிகாமம் பகுதியில் வந்த இரு சிங்கள இராணுவ வாகனங்கள் தமிழீழப் போராளிகளின் நிலக்கண்ணி வெடிக்கிலக்காகியதைத் தொடர்ந்து சிங்கள இராணுவத்தினர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

14-5-1985.

* இனம் தெரியாத ஆயுதம் ஏந்திய குழு ஒன்று அநுராதபுரம், வில்பத்து ஆகிய பகுதிகளில் பொதுமக்கள் மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது, 78க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாகவும், 100க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாகவும்,

* மேற்படி குழு புத்தளம் நோக்கிச் செல்கையில் நொச்சியாகம பொலிஸ் நிலையத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளது. மேற்படி படுகொலையைத் தொடர்ந்து அறிக்கையொன்றை விடுத்த தமிழீழ மக்கள் விடுதலைக்கழக செயலதிபர் தோழர் உமாமகேஸ்வரன் இவ்வாறான கொலைகள் நடப்பதை கண்டித்துள்ளார்.

15-5-85

* நயினாதீவுக் கடற்பகுதியில் சுமார் 80ற்கு மேற்பட்ட தமிழ்ப் பயணிகள் பயணம் செய்த படகினை வழிமறித்து சிறீலங்காவின் கடற்படையினர் நடாத்திய வெறியாட்டத்தின்போது 50ற்கு மேற்பட்ட தமிழர்கள் கத்தி, கோடரி என்பவற்றால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

17-05-1985.

* அநுராதபுரம் இராணுவ முகாமில் இருந்த 25 தமிழர்களை வேறு இடமொன்றிற்கு இராணுவம் அழைத்துச் செல்கையில் இராணுவ கோப்ரல் ஒருவர் வெறிபிடித்த சூட்டில் 6பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 18 பேர் படுகாயமடைந்துள்ளார்.

19-5-1985.

* கல்முனைப் பகுதியில் 19 தமிழர்கள் சிங்கள பொலிஸ் கொமாண்டோக்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

21-5-1985

வாழைச்சேனையில் தமிழீழப் போராளி-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தியாக வீரன் சிவகுமாரன்



மலர்வு:- 26-08-50

உதிர்வு:- 05-06-74

சிவகுமாரன் - தமிழர்களின் நெஞ்சில் என்றும் இடம் பெற்றுவிட்ட வீர வேங்கை!

தான் என்றும், தன் குடும்பம் என்றும் சிந்தனையற்று தமிழினம் ஒன்றின் வாழ்வுக்கே தன்னை அர்ப்பணித்த உண்மைத்தொண்டன்.

சாதிமத பேதங்களை எதிர்த்துச் சமபந்தி போசனத்தை 1968 இல் நடத்திச் சமூகப் புரட்சியை நடத்தியவன் சிவகுமாரன்.

தமிழர் வாழ்வெனும் பாலைவனத்தைச் சோலைவனமாக்கப் புறப்பட்டவன், 1974 ஜுன் ஐந்தில் அப்பணிக்குத் தன்னையே களபலியாகத் தந்து வரலாற்று நாயகனானான்.

அடக்குமுறையாளர்கள் புரியக்கூடிய ஒரே மொழி துப்பாக்கி மொழிதான் என்பதை உணர்ந்தவன் சிவகுமாரன்.

காந்தியார் கூறியபடி, அடக்கு முறைக்கு அஞ்சிக் கோழையாகாது அதனை வன்முறையில் எதிர்த்தவன் சிவகுமாரன். கட்டிவளர்க்கப் பாடுபடும் வேளையில் இனத்தைக் காட்டிக்கொடுத்து வயிற வளர்த்த எட்டப்பர் கூட்டத்தை அழித்தொழித்து, இன ஒற்றுமை பேணத் துடித்த உள்ளம் அவனுடையது. சிங்களக் கொடுங்கோல் ஆட்சியின் கூலிப்படைகள் தமிழினத்திற்குச் செய்த கொடுமைகளைத் தாங்கொணாது, அவர்களைக் கொன்றொழிக்கப் புறப்பட்ட வீர உள்ளம் அவனுடையது.

என்றும் எப்போதும் துரோகிகளைப் பகிஷ்கரிப்பீர் என ஆணையிட்டவன் சிவகுமாரன்.

துரோகிகள் இல்லாத தமிழ்ச்சமுதாயத்தை உருவாக்கவும், தமிழீழத்தை அடையவும் எம்மையே அர்ப்பணிப்போம் என அவனது நினைவு நாளில் உறுதி ஏற்போம்.

வாழ்க சிவகுமாரன் பெயர்!
வெல்க தமிழீழப் புரட்சி!

---

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் — தகவற்பிரிவு.

---

Published by People's Liberation Organisation of Thamil Eelam, 46 Central Road, Worcester Park, Surrey KT4 8HY, UK
Printed by Grafton Litho Ltd (TU), 5b Old Town, London SW4 0JT

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்